This Question Paper consists of **37** questions [Section-A **(19)** + Section-B **(9+9)**] and **8** printed pages.
**8** பக்கங்களைக் கொண்ட இவ்வினாத்தாளில் **37** வினாக்கள் உள்ளன [பகுதி அ-**(19)** + பகுதி ஆ-**(9 + 9)**].

**Roll No.** (ரோல் நம்பர்) | | | | | | | | | | | | |

**Code No. 65/SS/A/TM**
கோட் நம்பர்

**Set**/செட் - A

# (தமிழ்)
# (TAMIL)
# (304)

Day and Date of Examination :
(தேர்வு நடைபெறும் நாள் மற்றும் தேதி) : ____________________

Signature of Invigilators :
(தேர்வு மேற்பார்வையாளர் கையொப்பம்) : **1.** ____________________

**2.** ____________________

**பொதுக் குறிப்புகள் :**

1 தேர்வு எழுதுவோர் தங்களின் வரிசை எண்ணை (Roll No.) வினாத்தாளின் முன்பக்கம் எழுத வேண்டும்.

2 வினாத்தாளில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களின் எண்ணிக்கையும் வினாத்தாளின் முன்பக்கம் அச்சாகியுள்ள வினாக்களின் எண்ணிக்கையும் மொத்த பக்கங்களின் எண்ணிக்கையும் சரியாக உள்ளனவா என்பதையும் அனைத்து வினாக்களும் வரிசையாக உள்ளனவா என்பதையும் சரிபார்க்கவும்.

3 வினாத்தாளில் ஏதேனும் அடையாளக் குறிகள் இட்டாலோ அல்லது தேர்வு எழுதுபவர் தனது எண்ணை அதற்கென ஒதுக்கப்படாத இடத்தில் எழுதினாலோ தேர்வு எழுதுபவர் தேர்வு எழுதும் தகுதியை இழக்க நேரிடும்.

4 உங்களது வினாத்தாளின் எண்ணை (கோட் ந. **65/SS/A/TM** மற்றும் செட் A என்று) வினாத்தாளில் எழுதுங்கள்.

# (தமிழ்)
# (TAMIL)
# (304)

காலம் : **3** மணி ] [ மொ. மதிப்பெண் : **100**

**அறிவிப்பு :** **(i)** இந்த வினாத்தாள் பகுதி 'அ' மற்றும் பகுதி 'ஆ' என்னும் இரு பகுதிகளைக் கொண்டுள்ளது.

**(ii)** பகுதி 'அ' வில் உள்ள எல்லா வினாக்களுக்கும் தவறாமல் விடையளிக்க வேண்டும்.

**(iii)** பகுதி 'ஆ' வில் இரண்டு விருப்பப் பாடங்கள் உள்ளன. தேர்வாளர் இவற்றில் தங்களுக்குரிய ஒரு விருப்பப் பாடத்தின் வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

**(iv)** வினாக்களுக்குரிய மதிப்பெண் அவ்வவ் வினாவிற்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ளது.

## பகுதி - அ

*** எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும்.**

**ஓரிரு சொற்களில் விடை தருக :** **1×17=17**

**1** இறைவன் யாருக்குக் களிப்பருள்வான்? **1**

**2** நண்ணிய - பொருள் தருக. **1**

**3** பாரதிதாசன் எதைக் கண்மூடி வழக்கம் என்கிறார்? **1**

4 முக்கூடலுக்கு தற்போது வழங்கும் பெயர் யாது? 1

5 தமிழ் மொழியில் கிடைத்துள்ள முதல் காப்பியம் எது? 1

6 செம்புலத்தின் இயல்பு யாது? 1

7 நமக்குக் கிடைத்துள்ள தொன்மையான நூல் எது? 1

8 தெனாலிராமன் பூனைக்கு ................ வைத்து குடிக்க வைத்தார். 1

9 காவடிச் சிந்து பாடலை முதலில் பாடியவர் யார்? 1

10 திருத்தக்க தேவர் படைத்த நூல் ................. . 1

11 மணற்பாங்கான இடத்தில் கட்டப்பட்ட அணை எது? 1

12 அவருள் இவனே கள்வன் என்பதில் ஏகார இடைச்சொல் ................ பொருளில் வந்துள்ளது. 1

13 வினைத்தொகைக்கு சான்று தருக. 1

14 கடலும் கடல் சார்ந்த இடமும் ................ என்று அழைக்கப்படும். 1

15 சுக்கு மிளகு என்பது ................. புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையாகும். 1

16 தொகைநிலைத் தொடர் எத்தனை வகைப்படும்? 1

17 "Visual Media" - இச் சொல்லுக்கான தமிழ்ச் சொல் யாது? 1

18 **(அ) எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்க.** **4×3=12**

(i) நிலம் எவ்வாறு பெருமையடையும்?

(ii) எதனால் மக்களை பொறியற்ற விலங்கு என்கிறார் பாரதியார்.

(iii) தூது என்பதன் விளக்கம் தருக.

(iv) எப்பாலும் ஆகாக் கெடும் ஏன்?

**(ஆ) எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்கவும்.** **4×3=12**

(i) மயில் நடனத்தின் சிறப்புகளைக் கூறுக.

(ii) பதினெண்மேற்கணக்கு நூல்கள் யாவை?

(iii) சித்த மருத்துவத்தின் சிறப்புகள் யாவை?

(iv) கதவு சிறுகதை உணர்த்தும் கருத்து யாது?

**(இ) எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்கவும்.** **4×2=8**

(i) இராமலிங்கரின் மனித நேயச் சிந்தனையை எழுதுக.

(ii) தன்விவரக் குறிப்பில் இடம் பெற வேண்டியவை யாவை?

(iii) சிறுகதை என்பதை வரையறு.

**19 குறிப்பு : ஒரு பக்க அளவில் விடையளிக்க.**

**(அ) எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்க.** **6×2=12**

(i) பராபரக் கண்ணி மூலம் குணங்குடியார் கூறுவன யாவை?

(ii) வையத்து வாழ்வீர்காள் என்ற பாடலின் பொருளை எழுதுக.

(iii) சிலப்பதிகார வழக்குரைக்காதை செய்திகளைச் சுருக்கி எழுதுக.

(iv) காலமறிதலின் இன்றியமையாமை பற்றி எழுதுக.

**(ஆ) எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்க.** **6×3=18**

(i) தமிழ் மொழியின் தனித்தன்மை பற்றி விவரி.

(ii) வேலை கொடுத்தவன் சிறுகதையை சுருக்கி எழுதுக.

(iii) மதுரை மாநகரில் அமைந்துள்ள சுற்றுலாச் சிறப்புப் பற்றி எழுதுக.

(iv) தமிழர் ஆடற்கலையின் சிறப்பினை எடுத்துரைக்க.

(v) சிற்றிலக்கியங்கள் குறிப்பு வரைக.

(vi) தமிழரின் கட்டடக்கலை குறித்து எழுதுக.

**(இ) ஏதேனும் ஒரு வினாவிற்கு விடையளிக்கவும்.** **6×1=6**

(i) சிதம்பரம் சாயாவனத்தை விலைக்கு வாங்கிய நோக்கத்தைக் கூறுக.

(ii) ஐராவதீஸ்வரம் திருக்கோவிலின் சிறப்பை விவரி.

## பகுதி - ஆ

### விருப்பப் பாடம் - I

### (இணையமும் தமிழும்)

20 அச்சு ஊடகத்திற்கு ஆங்கிலத்தில் ..... என்று பெயர். 1

(அ) கம்ப்யூட்டர்

(ஆ) பிரிண்ட் மீடியா

(இ) பிரஸ்

(ஈ) பிரிண்டிங்

21 மைய விரிவலை என்பதன் சுருக்கம் யாது? 1

22 தமிழ் இணையதளம் ஒன்றின் பெயரைக் கூறுக? 1

23 Database - என்பதன் தமிழ்ச் சொல் என்ன? 1

24 தமிழ் பண்பாட்டு பயிற்சி மையத்தை ............. தோற்றுவித்தது. 1

**குறிப்பு : ஏதேனும் ஒரு வினாவிற்கு விடையளிக்க.** **4×1=4**

25 முகவர்கள் எத்தகைய திறன்கள் பெற்றிருக்க வேண்டும்?

26 மின்னஞ்சலின் சிறப்புகள் யாவை?

**குறிப்பு : ஏதேனும் ஒரு வினாவிற்கு விடையளிக்க.** **6×1=6**

27 தமிழில் மின்னஞ்சல் பயன்பாடு குறித்து எழுதுக?

28 இணையத்தின் பயன்கள் யாவை?

## விருப்பப் பாடம் - II
## (மேலாண்மை இயலும் தமிழும்)

20 மேலாளரின் பணிக்குப் பலவகை திறமை மிக்க ............ தேவைப்படுகிறது. 1

21 ஒரு நிறுவனத்தின் உயிர்நாடியான துறை எது? 1

22 கடிதம் என்பது யாது? 1

23 நிகழ்வுக் குறிப்பு எங்கெங்கு எடுக்கப்படுகின்றது? 1

24 தொகுக்கும் திறனின் ஒரு பகுதியாக எதனைக் கொள்ளலாம்? 1

**குறிப்பு : ஏதேனும் ஒரு வினாவிற்கு விடையளிக்க.** **4×1=4**

25 நெறிப்படுத்துதல் என்றால் என்ன?

26 தொகுக்கும் திறனுக்கு அடிப்படையானவை எவை?

**குறிப்பு : ஏதேனும் ஒரு வினாவிற்கு விடையளிக்க.** **6×1=6**

**27** மேலாண்மைத் தகவல் தொடர்புக்கு அவசியமான கூறுகள் யாவை?

**28** கடிதத்தின் பயன்கள் குறித்து கூறுக.

---